**தலைப்பு 433 – கிராமிய மற்றும் பிரதேச குடிநீர் வழங்கல் கருத்திட்ட அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

கிராமிய மற்றும் பிரதேச குடிநீர் வழங்கல் கருத்திட்ட அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றினை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) உறுப்புரையின் பிரகாரம் கிராமிய மற்றும் பிரதேச குடிநீர் கருத்திட்ட அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 யூன் 21 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூன் 29 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கிராமிய மற்றும் பிரதேச குடிநீர் வழங்கல் கருத்திட்ட அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் இராஜாங்க அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1) (ஈ) பிரிவின் பின்வரும் விடயங்கள் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கிராமிய மற்றும் பிரதேச குடிநீர வழங்கல் கருத்திட்ட அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு 2020 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட அமைச்சு என்பதனால் முன்னைய ஆண்டிற்கு தொடர்புடையதாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு காணப்படவில்லை. எனவே, மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக கூற முடியாததுடன் முன்னைய ஆண்டிற்காக என்னால் எந்தவொரு பரிந்துரைகளும் வெளியிடப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2020 ஒக்தோம்பர் 10 திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் வழிக்காட்டல் இல 06 இன் 7(vi) பந்தியின் பிரகாரம் நிதிச் செயலாற்றல் கூற்றின் படி ஆண்டு இறுதியில் திறைச்சேரிக்கு தீர்க்கப்பட வேண்டிய அல்லது திறைச்சேரியிடமிருந்து கிடைக்கப்பெற வேண்டிய பெறுமதிகள் மற்றும் காசுப் புத்தகத்தின் பிரகாரம் திறைச்சேரிக்கு | முற்பண இணக்க கணக்கு இறுதி கணக்குடன் முன்வைக்காமை ஏற்றுக் கொள்ளப்படுகின்றதுடன் பின்னர் கணக்காய்வு உத்தியோகத்தர்களின் கோரிக்கையின் பிரகாரம் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டது. | 2020 ஒக்தோம்பர் 10 திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் வழிக்காட்டி இல 06 இன் 7(vi) பந்தியின் பிரகாரம் முற்பண இணக்க கணக்கொன்று தயாரிக்கப்பட்டு நிதிக் கூற்றுக்களுடன் முன்வைக்கப்படல் வேண்டும். |

தீர்க்கப்பட வேண்டிய பெறுமதி கட்டாயமாக வேறு பெறுமதி எடுப்பதினால் அம் மீதிகள் இணைக்கப்படுவதற்கு முற்பண இணைக்க கணக்கொன்று தயாரிக்கப்பட வேண்டியிருப்பினும் நிதிச் செயலாற்றல் கூற்றில் 2020 திசெம்பர் 31 இற்கு கட்டுநிதி மீதியாக காட்டப்படுகின்ற ரூபா 666,001,100 ஆன பெறுமதி ரத்து செய்து காட்டப்படுவதற்காக முறையாக தயாரிக்கப்பட்ட இணைக்க கணக்கொன்று தாயரிக்கப்பட்டு நிதிக் கூற்றுக்களுடன் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

**1.6.2 நிதிச் செயலாற்றல் கூற்று**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்குரிய ஏனைய பெறுவனவுகளாக அடையாளப்படுத்தப்பட வேண்டியிருந்த ரூபா 96,520 அமைச்சின் நிதிச் செயலாற்றல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சினால் முன்வைக்கப்பட்ட, நிதிச் செயலாற்றல் கூற்றில் ஏனைய பெறுவனவுகளாக எந்தவொரு தொகையும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஒக்தோம்பர் 10 திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் வழிக்காட்டி இல 06 இன் 7(vi) பந்தியின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

**1.6.3 நிதி நிலைமைக் கூற்று**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| நிதி நிலைமைக் கூற்று பிரகாரம் மற்றும் ஏசீஏ-பீ மாதிரி பத்திரத்தின் பிரகாரம் ரூபா 8,041,142 பெறுமதியான ஏனைய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் அமைச்சுக்கு சொந்தமாக காணப்படுகின்றமை குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் அமைச்சிக்கு சொந்தமான சொத்துக்களின் பெறுமதி ரூபா 7,736,862 ஆனதினால் ரூபா 304,280 இனால் ஆதனம் பொறி உபகரணங்கள் கூடுதலாக காட்டப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | நிதி நிலைமை தொடர்பான கூற்றில் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி இறுதி திறைச்சேரி அச்சு குறிப்புக்களின் பிரகாரம் மற்றும் இறுதி சிகாஸ் இன் சுருக்கத்தின் பிரகாரம் சரியானதாகும். | 2020 ஒக்தோம்பர் 10 திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் வழிக்காட்டி இல 06 இன் 7(vi) பந்தியின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

### 1.6.4 காசுப் பாய்ச்சல் கூற்று

---------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | அமைச்சின் காசுப் பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக செலவழிந்த காசுப் பாய்ச்சலின் கீழ் பங்களிப்பு மற்றும் மாற்றல் என எந்தவொரு செலவொன்றும் அடையாளப்படுத்தப்படாதிருப்பினும், கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அது ரூபா 69,713,834 ஆக காணப்பட்டது. | சிங்கள மொழியில் முன்வைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களினுள் அது தவறுதலாக முற்பணம் செலுத்தல் நெடுவரிசையில் குறிக்கப்பட்டிருந்தது. | 2020 ஒக்தோம்பர் 10 ஆம் திகதிய 02/2020 இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் வழிக்காட்டி இல 06 இன் 7(vi) பந்தியின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | முதலீட்டு செயற்பாடுகளுக்காக செலவிடப்பட்ட காசுப்பாய்ச்சலின் கீழ் பௌதீக சொத்து நிர்மாணித்தல் அல்லது கொள்வனவு செய்தல் மற்றும் வேறு முதலீடுகள் கையகப்படுத்தலுக்காக ரூபா 8,352,826 செலவிடப்பட்டிருந்ததென காசுப் பாய்ச்சல் கூற்றில் குறிப்பிடப்பட்டிருப்பினும், மீளாய்வாண்டினுள் அமைச்சினால் கொள்வனவு செய்யப்பட்ட பௌதீக சொத்து பெறுமதி ரூபா 7,736,862 ஆனதினால் ரூபா 615,964 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | இந்த பெறுமதி பௌதீக சொத்து கொள்வனவு செய்தல் மற்றும் பௌதீக சொத்து மேம்படுத்தல் ஆகிய இரு துறைகளுக்கும் தொடர்புடைய பெறுமதியாகும். அதன் பிரகாரம் சொத்து கொள்வனவு செய்தலுக்காக ரூபா 7,736,862 உம், மேம்படுத்துவதற்காக ரூபா 615,964 உம் ஆக கருத்திற் கொள்ளப்பட்டு இப் பெறுமதி கொண்டுவரப்பட்டுள்ளது. | -மேற்கூறப்பட்டவாறு- |
| (இ) | முதலீட்டு செற்பாடுகளுக்காக செலவிடப்பட்ட காசுப்பாய்ச்சலின் கீழ் வேறு முதலீடுகளுக்கான செலவினமாக ரூபா 69,628,608 அடையாளப்படுத்தப்பட்டிருப்பினும், கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் வேறு முதலீடுகளுக்காக செலவினம் ஏற்கப்பட்டிராமையினால் அப் பெறுமதியில் அச் செலவினம் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | சிங்கள மொழியில் முன்வைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களினுள் அது தவறுதலாக முற்பணம் செலுத்தல் நெடுவரிசையில் குறிப்பிடப்பட்டுள்ளது. | -மேற்கூறப்பட்டவாறு- |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | அமைச்சின் காசுப் பாய்ச்சல் கூற்றில் நிதிச் செயற்பாடுகளிலிருந்து உருவான காசுப் பாய்ச்சலின் கீழ் வைப்பு பெறுவனவாக ரூபா 772,896 அடையாளப்படுத்தப்பட்டிருப்பினும், கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அது ரூபா 559,604 ஆனதினால் ரூபா 213,292 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | வைப்பு கணக்கு பெறுமதி 6000-0-0-18-170 இற்கு மாற்றப்படும் போது ரூபா 213,292 பெறுமதி கூடுதலாக வரவு வைக்கப்பட்டதுடன் அது மீண்டும் பேரேட்டின் ஊடாக சரிசெய்யப்பட்டது. | -மேற்கூறப்பட்டவாறு- |
| (உ) | கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டினுள் வைப்பு செலுத்தல்களாக எந்தவொரு செலவும் ஏற்கப்பட்டிராததுடன், நிதிச் செயற்பாடுகளுக்காக செலவிடப்பட்ட காசுப்பாய்ச்சலின் கீழ் வைப்பு செலுத்தல்களாக ரூபா 213,292 குறிப்பிடப்பட்டிருந்தது. | நிதிச் செயற்பாடுகளுக்காக செலவிடப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்றில் வைப்பு செலுத்தல்களாக ரூபா 213,292 உள்ளடக்கப்பட்டிருந்தது. | -மேற்கூறப்பட்டவாறு- |

### 1.6.5 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை

அமைச்சினால் பின்வரும் சில பதிவேடுகள் பேணப்பட்டிராததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என்பது தெரிவுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டன

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| **(அ) பிணைகள் பதிவேடு** | | |
| நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்கள் உள்ளடங்கிய பிணைகள் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது எங்கள் அமைச்சில் எல்லைக்குட்பட்ட பணிநிலையினர் கடமை புரிகின்றமையினால் எதிர்காலத்தில் இதற்காக நடவடிக்கைகள் தயார்செய்யப்படுமென தயவுடன் தெரிவிக்கின்றேன் | நிதிப்பிரமாணம் 891(1) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உள்ளடங்கும் விதத்தில் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பான பிணைகள் பதிவேடொன்று பேணப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | **நட்டங்கள் தொடர்பான பதிவேடு**<br><br>நட்டங்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை | -மேற்கூறப்பட்டவாறு- | நிதிப்பிரமாணம் 110 இன் ஏற்பாடுகளுக்கமைய அதன் கீழான மாதிரிக்கமைய நட்டங்கள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட வேண்டும். |
| (இ) | வாகன சம்பவக்குறிப்பு புத்தகமொன்று பேணப்பட்டிருக்கவில்லை | மேற்கூறப்பட்டவாறு- | வாகன சம்பவக்குறிப்பு புத்தகமொன்று பேணப்பட வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

-----------------

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

-------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டில் அபிவிருத்தி வேலை செயற்திட்டங்கள் 11 இன் நிகர நிதியேற்பாடு ரூபா 1,250 மில்லியனாக காணப்பட்டது. அவ்வாறாயினும், அச் செயற்திட்டங்களின் செலவினம் ரூபா 723 மில்லியன் ஆனதினால் ரூபா 527 மில்லியன் எஞ்சி காணப்பட்டது. அதன் பிரகாரம் நிகர நிதியேற்பாட்டிற்கு மிகுதி 42 சதவீதமாக காணப்பட்டது. | கட்டுநிதிக்கான முற்பணம் குறித்த காலத்தில் அமைச்சிற்கு பெறப்பட்டிருக்கவில்லை. | நி.பி 50 இன் பிரகாரம் செலவின மதிப்பீடு சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |

### 2.2 செலவின முகாமைத்துவம்

---------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| **(அ)** | உணவு நீர் உத்தியோகப்பூர்வ ஆடை வழங்கல் செலவு விடயத்தின் கீழ் (433-1-1-0-1203) ஆன ரூபா 100,000 ஆன நிகர நிதியேற்பாடு முழுமையாக எஞ்சியிருந்தது. | காணப்பட்ட கொரோனா வைரஸ் நிலைமையினால் அமைச்சினுள் கூட்டங்கள் அல்லது வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்படாமையினால் ஒதுக்கப்பட்ட ஏற்பாடு | நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் செலவின மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | முழுமையாக எஞ்சியிருந்தது. | |
| (ஆ) | மீண்டெழும் செலவு விடயங்கள் 02 இன் கீழ் ஆன ரூபா 666,000 ஆன மதிப்பிடப்பட்ட நிதியேற்பாடு நி.பி 66 ஊடாக முழுமையாக வேறு செலவு விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது. | காணப்பட்ட கொரோனா வைரஸ் நிலைமையினால் இந்நாட்டினுள் வெளிநாட்டு பயணங்கள் மேற்கொள்ளாமையின் காரணத்தினால் அதற்கான தேவைப்படொன்று காணப்படாமையினால் ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடு நி.பி 66 ஊடாக நிதியேற்பாடு போதுமானதாக காணப்படாத வேறு செலவு விடயங்களுக்கு மாற்றப்பட்டுள்ளது. | -மேற்கூறப்பட்டவாறு- |
| (இ) | மீண்டெழும் செலவு விடயங்கள் 08 இற்கான ரூபா 19,701,000 ஆன மதிப்பிடப்பட்ட நிதியேற்பாடுகளில் 15 சதவீதம் தொடக்கம் 64 சதவீதம் வரையான வீச்சில் நிதியேற்பாடு நி.பி 66 ஊடாக வேறு செலவு விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டினுள் கொரோனா வைரஸ் காரணத்தினால் இந்த நிதியேற்பாடு மிகுதியொன்று ஏற்பட்டமையினால் நிதியேற்பாடு போதமானதாக காணப்படாத செலவு விடயங்களுக்காக இந்த நிதியேற்பாடு மாற்றல் மேற்கொள்ளப்பட்டது. | மேற்கூறப்பட்டவாறு- |
| (ஈ) | மூலதன செலவு விடயங்கள் 04 இற்கான ரூபா 188,000 ஆன நிகர நிதியேற்பாடே முழுமையாக எஞ்சியிருந்தது. | கொவிட் நோயின் காரணத்தினால் அலுவலகம் மூடியிருத்தல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பணிநிலையினர் இணைத்துக் கொள்ளாமையின் காரணத்தினால் இந்த நிதியேற்பாடு எஞ்சியிருந்தது. | மேற்கூறப்பட்டவாறு- |
| (உ) | மீளாய்வாண்டிற்கு தொடர்படையதாக செலவு விடயங்கள் 05 இன் கீழ் பெறப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 444.86 மில்லியன் நிதியேற்பாடுகளில் பெறுமதி ரூபா 316.84 மில்லியனான நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்ததுடன் அது ஒவ்வொரு செலவு விடயங்களில் 50 சதவீதத்தினை விட அதிக பெறுமதியாக காணப்பட்டது. | கொவிட் தொற்று, முற்பணம் கிடைக்கப்பெறாமை, காணப்பட்ட காணி பிரச்சனைகள், ஒப்பந்தக்காரர்களின் வேலைகள் இடைநிறுத்தப்படல் இதற்கான காரணங்களாயிருந்தன. | மேற்கூறப்பட்டவாறு- |

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடன்பாடுகளுக்கு உட்படல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| ஆண்டினுள் தீர்க்கப்பட முடியுமாயிருந்த மற்றும் மீளாய்வாண்டில் ஆகஸ்ட் தொடக்கம் திசெம்பர் வரையான காலப்பகுதிக்கு தொடர்பான பெறுமதி ரூபா 868,184 ஆன செலவினம் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தொடர்புடைய வவுசர் கொடுப்பனவிற்காக 2020.12.31 திகதிக்கு முன்னர் கணக்கு கிளைக்கு முன்வைக்கப்படாமையின் அடிப்படையில் இந்த கொடுப்பனவு 2020 ஆம் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்டிராததுடன் கணக்கு கிளைக்கு முன்வைக்கப்பட்டதன் பின்னர் 2020 ஆம் ஆண்டிற்கு தொடர்படையதென்பதனால் கடன்பாடாக ஆவணப்படுத்தப்பட்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளதென குறிப்பிடுகின்றேன் | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்

தெரிவு கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் 371 ஆம் நிதிப் பிரமாணம் | 2020 ஆகஸ்ட் தொடக்கம் திசெம்பர் வரை 04 சந்தர்ப்பங்களின் போது வெவ்வேறு பணிகளுக்காக வெளியிடப்பட்ட ரூபா 130,988 ஆன துண்டு விலை இடைக்கால கட்டுநிதி தொடர்புடைய பணிகள் நிறைவடைந்தவுடனே தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் தாமதமின்றி முற்பணம் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவிக்கின்றேன். | துண்டு விலை இடைக்கால கட்டுநிதி தொடர்படைய பணி நிறைவடைந்தவுடனே தீர்க்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2016 மார்ச் 31 ஆம் திகதிய 5/2016 ஆம் இலக்க அரச நிதிச் | 2020 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பௌதீக பொருள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அவ் அறிக்கை 2021 மார்ச் 17 ஆம் திகதிக்கு முன்னர் | 2021.05.31 இற்கு முன்னர் பௌதீக பொருள் ஆய்வு நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்நது. | அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த பௌதீக பொருள் ஆய்வு |

| | | | |
|---|---|---|---|
| சுற்றறிக்கையின் 3.1.6 ஆம் பந்தி | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு முன்வைக்கப்பட வேண்டியிருப்பினும் 2021 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையிலும் அவ் அறிக்கை முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | | மேற்கொள்ளப்பட்டு அவ் அறிக்கை 2021 மார்ச் 17 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு முன்வைக்கப்படல் வேண்டும். |
| (இ) **பொது நிர்வாகச் சுற்றறிக்கை** | | | |
| (i) 2009 யூன் 17 ஆம் திகதிய 09/2009 (1) ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | அமைச்சின் பணிநியையினர் தம் சேவை நிலையத்திற்கு வருகை மற்றும் வெளியேறல் கைவிரல் அடையாள இயந்திரத்தின் ஊடாக உறுதி செய்யப்பட வேண்டினும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நீர் வழங்கல் அமைச்சுடன் கலந்துரையாடப்பட்டு மிகுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென தயவுடன் தெரிவிக்கின்றேன். | பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருகை மற்றும் வெளியேறல் கைவிரல் அடையாள இயந்திரத்தின் ஊடாக உறுதிப்படுத்தப்படல் வேண்டும். |
| (ii) 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | அமைச்சின் வாகனங்களுக்காக எரிப்பொருள் எரிதல் தொடர்பான பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அது தொடர்பாக செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் வாகனங்களின் எரிப்பொருள் பரிசோதனை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 2.5 முற்பண வழங்கல் மற்றும் தீர்ப்பனவு

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரைகள்** |
|---|---|---|
| மீளாய்வாண்டில் ஆகஸ்ட் 30 ஆம் திகதி தொடக்கம் திசெம்பர் 14 ஆம் திகதி வரை நான்கு சந்தர்ப்பங்களின் போது வெவ்வேறு பணிகளுக்காக பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த ரூபா 130,988 ஆன முற்பணம் தீர்க்கப்படும் போது 17 தொடக்கம் 76 நாட்கள் வரையான கால வீச்சின் தாமதம் காணக்கூடியதாகவிருந்தது. | எதிர்காலத்தில் தாமதமின்றி முற்பணம் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவிக்கின்றேன். | பணி நிறைவடைந்தவுடனே முற்பணம் தீர்க்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 2014/01 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டிற்காக செயல் நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருப்பினும் அச் சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தியின் பிரகாரம் உள்ளடக்கப்பட வேண்டிய பின்வரும் விடயங்கள் அதனுள் உள்ளடக்கப்படாமை அவதானிக்கப்பட்டது. | | | |
| (அ) | மீளாய்வாண்டிற்கு நாளதுவயையாக்கப்பட்ட நிறுவனத்தின் தாபன கட்டமைப்பு, அங்கிகரிக்கப்பட்ட பணிநிலையினர் மற்றும் உள்ளவாரான பணிநிலையினர் தொடர்பான தகவல்கள் | அமைச்சு 2020 செப்தெம்பர் மாதம் ஸ்தாபிக்கப்பட்டமையினால் தாபன கட்டமைப்பு மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பணிநிலையினர் திருத்தத்திற்கு உட்படல் இதற்கு காரணமாகியது. | அரச நிதிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | வருடாந்த யெற்பாடுகளுக்கான முற்பண தேவைப்பாடு திட்டம் | அமைச்சு 2020 செப்தெம்பர் மாதம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தமையினால் வருடாந்த முற்பண தேவைப்பாடு திட்டம் தயாரிக்கப்படாததுடன் மாதாந்தம் முற்பணம் விண்ணபப்பப்படிவம் தயாரிக்கப்பட்டு திறைச்சேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ளது. | -மேற்கூறப்பட்டவாறு- |
| (இ) | திட்டமிடப்பட்டுள்ள பிரதான அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கான வருடாந்த பெறுகைத் திட்டம் | வருடாந்த பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்படாமையை ஏற்றுக் கொள்கின்றேன் | -மேற்கூறப்பட்டவாறு- |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | உள்ளக கணக்காய்வு திட்டம். | அப் பதவி இன்னுமாக வெற்றிடமாக காணப்படுகின்றமையினால் கணக்காய்வு திட்டமொன்று தயாரிக்காமையை ஏற்றுக்கொள்கின்றேன். | -மேற்கூறப்பட்டவாறு- |

## 3.2 பணிப்பொறுப்புகள் நிறைவேற்றப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| அமைச்சின் கீழ் செயற்படுத்தப்பட்டிருந்த அடையாளப்படுத்தப்படாத சிறுநீரக நோய்களுக்கு உட்பட்ட பிரதேசங்களுக்காக பாதுகாப்பான குடிநீர் வழங்கலின் கீழ் புத்தளம் மாவட்டத்தின் மஹவெவ தர்மாராம வித்தியாலத்திற்கு 4 மில்லியான நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டு நெநோ பில்டர் வழங்கி பொருத்திக் கொடுப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் கணக்காய்வுக்கு முன்வைக்கப்பட்டிருந்த செயலாற்றல் முன்னேற்ற அறிக்கையிலும் அப் பணி நிறைவேற்றியிருந்தமை குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அச் செயற்திட்டம் பௌதீகமாக மேற்கொள்ளப்படாமை கணக்காய்வின் போது அடையாளப்படுத்தப்பட்டது. | காணப்பட்ட கொவிட் தொற்று நோய் நிலைமையின் காரணத்தினால் அனைத்து பாடசாலைகளும் ஆண்டு முழுவதும் மூடப்பட்டிருத்தல் காரணத்தினால் அவ் இரு செயற்திட்டங்களும் இரத்து செய்யப்பட்டு அதற்கு பதிலாக புத்தளம் பிரதேச செயலாளர் பிரிவிற்கு சொந்தமான சங்கட்டிகுளம் தெடன சமூக நீர் வழங்கல் முன்மொழிவு திட்டத்திற்காக மற்றும் பல்லம பிரதேச செயலாளர் பிரிவிற்கு சொந்தமான சியம்பலாவெவ எகமுது சமூக நீர் முன்மொழிவு திட்டமென சுத்திகரிப்பு இயந்திரங்கள் இரண்டு ஸ்தாபிக்கப்பட்டது. | திட்டமிடப்பட்ட பிரகாரம் பணிகள் நிறைவேற்றப்படல் வேண்டும் மற்றும் கணக்காய்விற்கு முன்வைக்கப்படுகின்ற தகவல்களின் சரித்தனமை உறுதி செய்யப்படல் வேண்டும். |

**3.3 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை**

**-----------------------------------------------------------------**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரைகள்** |
|---|---|---|
| **----------------------** | **----------------------------------** | ----------- |
| (அ) அமைச்சினால் கிராமிய நீர் வழங்கல் மற்றும் சுகாதார சேவைகள் மேம்படுத்தல் வேலைத்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட்டிருந்த மெனிக்கடவர மற்றும் பல்லேகம கிராமிய நீர் வழங்கல் செயற்திட்டம், பொலன்னறுவை பிங்பொகுனுகம கிராமிய நீர் வழங்கல் செயற்திட்டம் மற்றும் மாதொல எஹெலியகொடை பிரதேசத்தில் நாளொன்றுக்கு 100 மீட்டர் கியூபிக் கொள்வளவையுடைய நீர் சுத்திகரிப்பு பொறி பொருத்தல் ஆகிய செயற்திட்டங்களில் மற்றும் நீடித்த சிறுநீரக நோயில் பீடிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் நீர் ஊடாக பரவும் நோய்கள் தடுப்பு வேலைத்திட்டங்கள் கீழ் செயற்படுத்தப்பட்டிருந்த ஹபரண, எப்பாவல மற்றும் ஹம்பந்தோட்டை வரை குழாய் இடுதல், கிராம பிரதேசங்கள் மற்றும் பாடசாலைகளுக்காக மீள்சுழற்சி உபகரணங்கள் வழங்கி பொருத்தல், நீரின் தரம் பரீச்சித்தல் மற்றும் முகாமைத்துவம், கண்டி மாவட்டத்தினுள் நெநோ பில்டர் 05 வழங்கல், பொருத்தல் மற்றும் மக்களுக்கு பொது உடைமையாக்கல் ஆகிய செயற்திட்டங்களில் மீளாய்வாண்டு இறுதியில் எதிர்பார்க்கப்பட்ட மட்டம் அடையப்படுவதற்கு அமைச்சினால் முடியாதிருந்தது. | **மெனிக்கடவர மற்றும் பல்லேகம கிராமிய நீர் வழங்கல் செயற்திட்டம்**<br><br>தொடர்புடைய நீர் குழாய்கள் மற்றும் உபகரணங்கள் குறித்த காலத்தில் கிடைக்கப்பெறாமை, முற்பணம் பெற்றுக் கொடுத்ததில் தாமதம், கொரோனா தொற்று நோய் நிலைமை, நிர்மாணிப்பு ஆரம்பித்து செல்லுகையில் உண்டாகிய காணி பிரச்சனை தீர்பதற்காக பெருந்தோட்ட அமைச்சின் உதவி பெற்றுக் கொள்வதற்கு ஏற்பட்டமையும் இந்த தாமதம் ஏற்படுவதற்கு தாக்கமளித்திருந்தது.<br><br>**பொலொன்னறுவை பிங்பொகுனுகம கிராமிய நீர் வழங்கல் செயற்திட்டம்**<br><br>இந்த செயற்திட்டம் ஒப்பந்தக்காரருக்கு 2021 திசெம்பர் 15 ஆம் திகதி கையளிக்கப்பட்டுள்ளது. .<br><br>**மாதொல எஹெலியகொடை பிரதேசத்தின் நாளொன்றுக்கு 100 மீட்டர் கியுபிக் கெள்ளளவையுடைய சுத்திகரிப்பு பொறி பொருத்தல்**<br><br>இது தொடர்பாக கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | ஆண்டு ஆரம்பத்தின் போது திட்டமிடப்பட்ட பிரகாரம் தொடர்புடைய முன்னேற்றம் அடையப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**ஹபரன வரை குழாய் இடுதல், எப்பாவல வரை குழாய் இடுதல், கிராமிய பிரதேசங்களுக்காக மீள்சுழற்சி நீர் சுத்திகரிப்பு உபகரணம் வழங்கி பொருத்தல் மற்றும் பாடசாலைகளுக்காக மீள்சுழற்சி நீர் சுத்திகரிப்பு உபகரணம் வழங்கி பொருத்தல்**

கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.ல

**நீரின் தரம் பரீட்சித்தல் மற்றும் முகாமைத்துவ கிரயம்**

காணப்பட்ட கொரோனா வைரஸ் நிலைமையினால் கிராமங்களுக்கு சென்று நீர் மாதிரிகள் பரிசோதிப்பதற்கு முடியாது போனது. அதனால் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை அடைவதற்கு முடியாதிருந்தது.

**ஹம்பந்தோட்டை வரை நீர் குழாய் இடுதல்**

தொடர்புடைய நீர் குழாய் மற்றும் உபகரணங்கள் பயன்பாட்டிற்கு உகந்ததாகாமையினால் நிகாரிக்கப்பட்டமையினால் குழாய் இடுதல் நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.

**கண்டி மாவட்டத்தினுள் நெநோ பில்டர் 05 வழங்கல், பொருத்தல் மற்றும் மக்களுக்கு பொது உடைமையாக்கல்**

காணப்பட்ட அதிக மழை, கொரோனா தொற்று நோய் நிலைமையினால் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்படவில்லை.

## 3.4 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

அமைச்சின் கீழ் மேற்பார்வை செய்யப்படுகின்ற தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தின் ஊடாக செயற்படுத்தப்பட்டிருந்த பின்வரும் செயற்திட்டங்கள் நிறைவேற்றல் தாமதமொன்று காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | தேசிய சமூக நீர் செயற்திட்டத்தின் கீழ் 2019 ஆம் ஆண்டினுள் செயற்படுத்தப்பட்ட மற்றும் 2019 திசெம்பர் 31 இற்கு முடிவுறுத்துவதற்கு வேண்டி காணப்பட்ட கிரயம் ரூபா 1,778 ஆன 123 செயற்திட்டங்களில் கிரயம் ரூபா 597 மில்லியன் ஆன 35 செயற்திட்டங்கள் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், அதற்கிடையில் ரூபா 59,218,151 ஆன மதிப்பீட்டின் அடிப்படையில் மாத்தறை மாவட்டத்தில் பொரம்பகனன்கே கிராம சேவகர் பிரிவில் செயற்படுத்தப்பட்டிருந்த பிரதீபா சமூக அடிப்படையிலான அமைப்பின் செயற்திட்ட நடவடிக்கைகளின் 2020 திசெம்பர் 31 இற்கு பௌதீக முன்னேற்றம் 40 சதவீதமான கீழ் மட்டத்தில் காணப்பட்டது. | அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் திட்டமிடல் மற்றும் செயற்பாட்டிற்கு கொண்டு வரல் இந்த அமைச்சின் கீழ் காணப்படுகின்ற தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. திணைக்களத்தின் கட்டுப்பாட்டிலிருந்து விலகிய மின்சாரம் பெற்றுக்கொள்ளலில், குழாய் இடுவதற்காக வழி சேதப்படுத்தலிற்காக அங்கீகாரம் பெற்றுக் கொள்ளல், நீர் மூலகங்களுக்கு அணுகுவதற்னு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுவதற்காக எதிர்பார்க்கப்பட்ட காலத்தினை விட அதிக காலம் செல்லல் இதற்கான காரணமாகியிருந்தது. | திட்டமிடப்பட்ட பிரகாரம் செயற்திட்டங்கள் நிறைவு செய்வதற்கு வழிமுறைகள் எடுத்தல் மற்றும் அது தொடர்பாக அமைச்சினால் நேரடி மேற்பார்வையொன்று மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தின் நிதியேற்பாட்டின் கீழ் 2018,2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்டிருந்த செயற்திட்டங்களினுள் 2020 திசெம்பர் 31 இற்கு வேலை நிறைவு செய்வதற்கு வேண்டியிருந்த கிரயம் 50,483,201 ஆன 25 | -மேற்கூறப்பட்டவாறு- | திட்டமிடப்பட்ட பிரகாரம் செயற்திட்டங்கள் நிறைவு செய்வதற்கு வழிமுறைகள் எடுத்தல் மற்றும் அது தொடர்பாக அமைச்சினால் நேரடி மேற்பார்வையொன்று மேற்கொள்ளப்படல் வேண்டும். |

செயற்திட்டங்களின் வேலைகள் மீளாய்வாண்டு இறுதி வரையிலும் நிறைவு செய்யப்படாதிருந்ததுடன் அதில் நான்கு செயற்திட்டங்களின் பௌதீக முன்னேற்றம் 50 சதவீதத்திற்கும் அதிகமான கீழ் மட்டத்தல் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

## 3.5 பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதும் செயன்முன்னேற்றம் அடையப்படாத செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| முன்தலம சுத்திகரிப்பு பொறி நிர்மாணித்தல், குழாய் கிணறு நிர்மாணித்தல் மற்றும் கண்டி, அம்பாறை மற்றும் மன்னார் போன்ற மாவட்டங்களில் காணப்படுகின்ற ஆறு நீர் முன்மொழிவுத் திட்டங்களின் நிலையை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 25.4 மில்லியன் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருப்பினும் அச் செயற்திட்டங்கள் மீளாய்வாண்டினுள் ஆரம்பிப்பதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.<br>எவ்வாறாயினும் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்டிராத அநுராதபுர மாவட்டத்தினுள் 05 நெநோ பில்டர்களும் குருநாகலை மாவட்டத்தினுள் 02 நெநோ பில்டர்களும் மற்றும் பொலொன்னறுவை மாவட்டத்தினுள் 03 நெநோ பில்டர்களும் வழங்கி பொருத்தல் போன்ற செயற்திட்டங்கள் கிராமிய நீர் வழங்கள் மற்றும் சுகாதார சேவை மேம்படுத்தல் செயற்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டினுள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | **முன்தலம சுத்திகரிப்பு பொறி நிர்மாணித்தல்**<br>காணப்பட்ட கொரோனா தொற்று நோய் நிலைமையின் காரணத்தினால் அடிப்படை வேலைகள் தாமதமாகின.<br>**குழாய் கிணறுகள் நிர்மாணித்தல்**<br>காணப்பட்ட கொவிட்ட நிலைமையினால் திட்டங்கள் செயற்படுத்துவதற்கு முடியாது போனது.<br>**கண்டி, அம்பாறை மற்றும் மன்னார் மாவட்டங்களில் காணப்படுனிள்ற நீர் முன்மொழிவுத் திட்டங்களின் நிலை அபிவிருத்தி செய்தல்**<br>பின்னர் மேற்கொள்ளப்பட்ட மொபைல் சேவைகளின் போது பெறப்பட்ட முன்மொழிவுகள் அவசர தேவைப்பாடுகள் என கருத்திற் கொண்டு முன்னுரிமை வழங்கப்படும் போது அடையாளப்படுத்தப்பட்ட சிறுநீரக நோய் அதிகமாக தொற்றியுள்ள பிரதேசங்களான அநுராதபுரம், | திட்டமிடப்பட்ட பிரகாரம் செயற்திட்டங்கள் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படும் போது முன்னுரிமை பெற்றுக் கொடுக்கப்பட வேண்டிய நாட்டில் காணப்படுகின்ற தேவைகள் தொடர்பாக கவனம் செலுத்தப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | பொலொன்னறுவை மற்றும் குருநாகலை போன்ற மாவட்டங்களின் 10 இடங்களில் நெநோ சுத்திகரிப்பு இயந்திரங்கள் ஸ்தாபிக்கப்பட்டு 100% நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் என்பதனால் இந்த முன்மொழிவு அகற்றுவதற்கு நேர்ந்தது. | |

## 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| இராஜாங்க அமைச்சினால் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் ஏனைய அரச நிறுவனங்களுக்கு சொந்தமான 06 வாகனங்கள் அமைச்சினால் மீளாய்வாண்டினுள் பயன்படுத்தப்பட்டிருந்தது. | 2020 செப்தெம்பர் மாதம் ஸ்தாபிக்கப்பட்ட இந்த அமைச்சுக்கு புதிதாக வாகனங்கள் கொள்வனவு செய்தல் மேற்கொள்ளப்படாததுடன் கெபினட் அமைச்சினால் பெற்றுக் கொடுக்கப்பட்ட வாகனங்கள் பயன்படுத்தப்பட்டது. | ஏனைய அரச நிறுவனங்களுக்கு சொந்தமான வாகனங்கள் பயன்படுத்தப்படும் போது அவை முறையாக கையகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.7 அரச உத்தியோகத்தர்களின் பிணை வைத்தல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| **(அ)** | நிதி பிரமாணம் 128(1) (ங) மற்றும் 1999 ஏப்ரல் 09 ஆம் திகதிய 1/99 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 05 மற்றும் 06 பந்திகள் பிரகாரம் பிணை வைப்பதற்கு குறித்த உத்தியோகத்தர்கள் 03 மாதங்களுக்குள் பிணை வைக்கப்பட வேண்டியதுடன் சுற்றறிக்கையில் குறிப்பிடப்படாத இருப்பினும் பிணை வைக்க வேண்டிய பதவிகள் வகிக்கின்ற வேறு | எதிர்காலத்தில் இதற்காக நடவடிக்கைகள் ஆயத்தப்படுத்தப்படுமென தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | பிணை அறவிடப்பட வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

உத்தியோகத்தர்கள் காணப்படுகையில் அவ் உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை வைத்துக்கொள்ளல் நிறுவன தலைவரின் பொறுப்பாகும். எனினும் இராஜாங்க அமைச்சின் செயலாளர், பணிப்பாளர், முதுநிலை உதவி செயலாளர் மற்றும் களஞ்சியசாலை பொருப்பாளர் ஆகிய பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| ஐரோப்பிய ஒன்றியத்தினால் அறிவிக்கப்பட்டுள்ள நிலைப்பேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான நியாய பத்திரம் - 2030 பிரகாரம் அமைச்சினால் அடையப்படவேண்டிய நிலைப்பேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் அது தொடர்பான குறிக்கோள்கள், நோக்கங்கள் செயற்படுத்தப்படுவதற்கு அமைச்சின் பணிப்பாறுப்புடன் தொடர்புடையதாக ஆர்வம் காட்டும் தரப்பினர் அடையாளப்படுத்தப்படாதிருந்ததுடன் அமைச்சினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிப்பொறுப்பின் நிறைவு மற்றும் பெறுபேறு தெளிவாக அடையாளப்படுத்தக் கூடிய வகையில் பிரதான செயலாற்றல் குறிக்காட்டி அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், இது தொடர்பாக தெரியப்படுத்துவதற்காக உள்ளக சுற்றறிக்கை, வழிக்காட்டல்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் ஏதும் நிறுவனத்தினால் நடத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், 2018 ஏப்ரல் 27 ஆம் திகதிய எம்எஸ்டிடப்/08/65 ஆம் இலக்க நிலைப்பேறான அபிவிருத்தி மற்றும் வனஜீவராசிகள் அமைச்சின் | நிலைப்பேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் அது தொடர்பான பணிகள் இது வரையில் நீர் வழங்கல் கெபினட் அமைச்சினூடாக மேற்கொள்ளப்படுகின்றதுடன் அதற்காக பங்களிப்பு செய்யுமாறு நீர் வழங்கல் கெபினட் அமைச்சு அல்லது இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அப்போதிருந்த நிலைப்பேறான அபிவிருத்தி மற்றும் வனஜீவராசிகள் அமைச்சு இது வரையில் இராஜாங்க அமைச்சிற்கு தெரியப்படுத்தபடவில்லை. | நிலைப்பேறான அபிவிருத்தி நோக்கங்களினை அடையாளப்படுத்தி அவை அடையப்படுவதற்கு தொடர்புடைய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

சுற்றறிக்கையின் பிரகாரம் நிலைப்பேறான அபிவிருத்தி நோக்கங்கள் அடையப்படுவதற்கு ஒருங்கிணைத்தல் நடவடிக்கைகளுக்காக இரண்டு உத்தியோகத்தர்கள் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

## 5. மனித வள முகாமைத்துவம்.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | அனைத்து ஊழிய குழுவின் கீழும் அங்கிகரிக்கப்பட்ட ஊழிய எண்ணிக்கையில் வெற்றிட எண்ணிக்கையின் வீதம் 63 சதவீதம் தொடக்கம் 100 சதவீதம் வரையான உயர் வீச்சில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. அது அங்கீகரிக்கப்பட்ட மொத்த ஊழிய எண்ணிக்கையில் 77 சதவீதமன உயர் றுெமதியினை கொண்டிருந்தது. | இந்த அமைச்சு புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட அமைச்சாவதுடன் பணிநிலையினர் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் உத்தியோகத்தர்கள் இணைக்கப்படுவதற்கு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | தேவையான பதவிகளுக்கான வெற்றிடங்கள் விரைவாக நிரப்பப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் மேலதிக செயலாளர், பணிப்பாளர் நாயகம், திட்டமிடல் பணிப்பாளர், உள்ளக கணக்காய்வாளர், கணக்காளர் போன்ற முதுநிலை மட்ட பதவிகளுக்காக 12 உத்தியோகத்தர்கள் அங்கீகரிக்கப்பட்டிருப்பினும், மீளாய்வாண்டு இறுதி வரையிலும் மூன்று உத்தியோகத்தர்கள் மட்டுமே இணைக்கப்பட்டிருந்தனர். எனவே, அது அமைச்சின் செயலாற்றலுக்காக பாதகமாக தாக்கமளிக்கக்கூடிய விடயமாக கணக்காய்வின் போது விலக்க முடியாதிருந்தது. | தேயையான நடவடிக்கைகள் பேனுவதற்காக நீர் வழங்கல் அமைச்சின் ஊடாக கட்டுப்பாடு மற்றும் அபிவிருத்தி பிரிவுகளுக்கு எல்லைக்குட்பட்ட பணிநிலையினர் இணைக்கப்பட்டனர். இந்த அமைச்சிற்காக 2020 செப்தெம்பர் மாதத்தில் புதிய பதவிகள் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் தற்காலிகமாக இணைக்கப்பட்டிருந்த பணிநிலையினர் இடமாற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். பதவிநிலை பதவிகளின் வெற்றிடங்கள் பூர்த்திசெய்துக் கொள்வதற்கு தொடர்பாக எப்போதும் அரச சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | -மேற்கூறப்பட்டவாறு- |
| (இ) | அபிவிருத்தி உத்தியோகத்தர், | அரச சேசைவ, மாகாண சபைகள் | -மேற்கூறப்பட்டவாறு- |

| | | | |
|---|---|---|---|
| | முகாமைத்துவ சேவைகள் உத்தியோகத்தர் ஆகிய இரண்டாம் நிலை பதவிகளுக்காக 11 உத்தியோகத்தர்கள் அங்கீகரிக்கப்பட்டிருப்பினும், மீளாய்வாண்டு இறுதியில் 04 உத்தியோகத்தர்கள் மட்டும் இணைக்கப்பட்டிருந்ததுடன் முதன்மை மட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட 07 பதவிகளும் மீளாய்வாண்டு இறுதியிலும் வெற்றிடங்களாக காணப்பட்டன. | மற்றும் உள்ளூராட்சி அமைச்சுடன் ஒருங்கிணைக்கப்பட்டு தொடர்புடைய பதவிகளுக்கு பணிநிலையினர் பெற்றுக் கொள்வதற்கு தொடர்ந்து முயற்சி செய்யப்படுகின்றது. பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பட்டதாரி பயிற்சியாளர்களும் நிரந்தரமாக்கப்பட்டதன் பின்னர் இப் பணிநிலையினருக்கு அப் பயிற்சியாளர்கள் பெற்றுக் கொள்ள முடியும். | |
| **(இ)** | அரச செலவின முகாமைத்துவம் என்ற தலைப்பிலான 2010 மே 14 ஆம் திகதிய சீஏ/1/17/1 இலக்கமுடைய சனாதிபதி அலுவலக கடிதத்தின் 2.2 ஆம் பந்தியின் பிரகாரம் தனிப்பட்ட உதவியாளர், முகாமைத்துவ உதவியாளர், அலுவலக உதவியாளர் மற்றும் ஓட்டுனர் ஆகிய பதவிகளுக்காக உத்தியோகத்தர்கள் சாதாரண அல்லது ஒப்பந்த அடிப்படையில் இணைக்கப்படுமேயென்றால், அவர்கள் அரசின் அங்கீகரிக்கப்பட்ட இணைத்தல் நடைமுறையின் தகுதிகளை பூர்த்தி செய்யப்படவேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், மேற்கூறப்பட்ட அடிப்படையில் இராஜாங்க அமைச்சின் பணிநிலையினருக்காக இணைக்கப்பட்டிருந்த தனிபட்ட உதவியாளர் பதவியொன்றில், 05 முகாமைத்துவ உதவியாளர் பதவிகளில், 02 அலுவலக உதவியாளர் பதவிகளில் மற்றும் 08 ஓட்டுனர் பதவிகளுக்கு தொடர்புடையதாக மேற்கூறப்பட்ட தகுதிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளமை உறுதிசெய்யப்பட்டமைக்கான சான்றுபடுத்தும் ஆவணங்கள் அவர்களில் தனிப்பட்ட கோவைகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சு பணிநிலையில் தனிப்பட்ட அலுவலக உதவியாளர், முகாமைத்துவ உதவியாளர் மற்றும் ஓட்டுனர் பதவிகளில் தகுதிகள் பரீட்சிப்பதற்கு விரைவான வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | தனிப்பட்ட உதவியாளர், முகாமைத்துவ உதவியாளர், அலுவலக உதவியாளர் மற்றும் ஓட்டுனர் பதவிகளுக்காக உத்தியோகத்தர்கள் சாதாரண அல்லது ஒப்பந்த அளப்படையில் இணைக்கப்படும் போது சனாதிபதி அலுவலக ஆலோசனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |